Registered as a News Paper in Sri Lanka; பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 16 உ வெள்ளிக்கிழமை (02 - 11 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 13 ஓசை 248

## காணிப் பங்கீட்டில் மலையக தமிழர் புறக்கணிப்பு

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில் அண்மையில் நடந்த காணிப் பகிர்வுகளில் ஒரு தமிழருக்காவது காணி கொடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. எகலிய கொடை, நிவித்திகலை, கலவான, அயகம, இரத்தினபுரி போன்ற பகுதிகளில் காணிகள் சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இதேவேளை இரத்தினபுரி 'பாம்காடன்' (4ஆம் பக்கம் பார்க்க)

# மணலாற்றில் மினி முகாம் புலிகளால் தகர்ப்பு

## மேஜர் சங்கர் உட்பட மூன்று புலிகள் வீர மரணம்

(மணலாறு)

மணலாற்றுப் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் மினிமுகாம் ஒன்று நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. இதில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்ததோடு முகாமைவிட்டு ஓடிவிட்டனர். மேஜர் சங்கர் உட்பட மூன்று விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர். அதேவேளை பலரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இந்த தாக்குதல் தொடர்பாகத் தெரியவருவதாவது: மணலாற்றுப் பிரதேசத்தில் அமைந்துள்ள முந்திரிகைக் குளம் இராணுவ முகாமுக்கும் சாம்பன்குளம் இராணுவமுகாமுக்கும் இடையில் இருந்த மினி இராணுவ முகாம் மீது நேற்று அதிகாலை 1.15 மணிக்கு விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். சில மணித்தியாலங்கள் நீடித்த இத் தாக்குதலில் இராணுவத்தினர் பத்து பேர் கொல்லப்பட்டதும் முகாமில் இருந்த ஏனைய இராணுவத்தினரும் காயமடைந்தவர்களும் தப்பி ஓடிவிட்டனர். இம் மோதலில் மேஜர் சங்கர் உட்பட மூன்று புலிகள் வீர மரணமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து முகாமிற்குள் புகுந்த விடுதலைப் புலிகள் அங்கிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றினர்.

### மூன்று புலிகள் வீரமரணம்

(மணலாறு)

மணலாறு இராணுவ மினி முகாம் தாக்குதலில் மேஜர் சங்கர் (மூதூர்), 2ஆம் லெப். மதுவன் (சாவகச்சேரி), முசோவினி (மூதூர்) ஆகியோர் வீர மரணமடைந்தனர்; இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை, இந்திய இராணு (4ஆம் பக்சம் பார்க்க)

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மணலாறு)

மணலாற்றுப் பகுதியில் நேற்று அதிகாலை இராணுவத்தினர் மீதான தாக்குதலில் விடுதலைப்புலிகளால்கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரங்கள் வருமாறு:

- ★ ஏ. கே. எல். எம். ஜி 2
- ★ ரம் மகசீன் 2
- ★ லிங் 637
- ★ ஆர். பி. ஜி. 1

(4ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காடையர் வவுனியாவில் அடாவடித்தனம்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதி இராணுவ சோதனை முகாம்களில் இராணுவத்தினருடன் இணைந்து முஸ்லிம் காடையர்கள் அடாவடித்தனம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் தமிழ்ப் பொதுமக்களின் பொருள்களை சோதனை செய்தபின்னர் முஸ்லிம் கும்பலொன்று மீண்டும் தமிழ் மக்களின் பைகளை பரிசோதனை செய்வதாகவும், பைகளில் காணப்படும் பெறுமதி வாய்ந்த பொருள்களை அபகரிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து வந்த ஜீவகுமார் என்ற இளைஞரிடமிருந்து 2000 ரூபா பணத்தை முஸ்லிம் காடையர் பறித்தெடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## ஊர்காவற் படை மீது புலிகள் தாக்குதல்

(திருக்கோணமலை)

உழவு யந்திரத்தில் வந்த சிங்கள ஊர்காவற்படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்தனர். ஊர்காவற்படையினரின் ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை 9 - 30 மணியளவில் அளுத்தோயாவுக்கும், இத்துலுத்துக்கும் இடையில் வைத்து உழவு இயந்திரத்தில் வந்துகொண்டிருந்த சிங்கள ஊர்காவற்படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் மூன்று ஊர்காவற் படையினர் பலியாகினர் பலர்படுகாயமடைந்தனர். ஊர்காவற் படையினரிடமிருந்து சொட்கண் 1, காட்றிச் 6 என்பனவும் கைப்பற்றப்பட்டன. (மு)

## வெள்ளப் பெருக்கால் 17 பேர்பலி

(சென்னை)

தமிழ் நாட்டில் பருவமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் நேற்று முன்தினம் 17 பேர் வரை இறந்துள்ளனர்.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட சுவர் ஒன்று குடிசை ஒன்றினுள் வீழ்ந்ததில் மூன்று குழந்தைகள் உட்பட 10 பேர் வரை இறந்துள்ளனர்

குளிரினாலும், வெள்ளம் அடித்துச் செல்லப்பட்டதனாலும் மேலும் பலர் இறந்திருக்கலாம் என தமிழ் நாடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## விசர்நாய்கடி மருந்தின்மையால் கன்னியாஸ்திரி மரணம்

(யாழ்ப்பாணம்)

விசர்நாய்கடி மருந்து பற்றாக்குறைக்கு திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த கன்னியாஸ்திரி ஒருவரும் பலியாகியுள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் விசர்நாய் கடிக்குள்ளான இக் கன்னியாஸ்திரி நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மூன்று முப்பது மணியளவில் உயிரிழந்தார். குறிப்பிட்ட இந்த விசர்நாய்க் கடிக்கு எதிராக ஏற்றப்படும் ஏ.ஆர்.வி. என்ற தடுப்பு மருந்து பற்றாக் குறையாலேயே இவரது உயிர் பறிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. (லோ)

## யாழ். மாநகரசபைக் கட்டடம் திருத்தப்படுகின்றது

(யாழ்ப்பாணம்)

குண்டுவீச்சால் சேதமுற்றிருந்த யாழ். மாநகரசபை கட்டடம் மீண்டும் திருத்தப்பட்டு வருகிறது.

நல்லூர் தீயணைக்கும் படை அலுவலகத்தை அண்டி உள்ள மாநகரசபை அலுவலகக் கட்டடம் தொடர்ச்சியான குண்டுவீச்சுக்கு கடந்த ஆகஸ்ட் மாதமளவில் உள்ளானதில் அக் கட்டடம் பலத்த சேதமடைந்தது. மாநகர சபை ஆணையாளரின் அலுவலகமும் இக் குண்டுவீச்சில் பலத்த சேதமுற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்பொழுது மீண்டும் இக் கட்டடத்திலேயே மாநகரசபை சேவைகளை செய்வதற்கு இக் கட்டடம் சில திருத்த வேலைகளுக்கு உள்ளாகி உள்ளது. (லோ)

## ஓய்வூதியம் பெறுவதற்கு அரச அதிபர் உதவவேண்டும்

(நீர்வேலி)

கோப்பாய் கிராமிய வங்கியினூடாக ஓய்வூதியம் பெறும் இளைப்பாறிய அரசாங்க ஊழியரின் துயர் துடைக்க யாழ் அரசாங்கஅதிபர்உதவவேண்டும் என்றுகோப்பாய் - நீர்வேலி வாழ் ஓய்வூதியம் பெறுவோர் எமது நிருபரிடம் தெரிவித்தனர்.

நீர்வேலி மொத்த விற்பனை நிலையத்தால் நடத்தப்படும் கிராமிய வங்கியில் நூற்றுக்கணக்கானோர் தமது சேமிப்புக் கணக்குகளை வைத்து மாதாந்த ஓய்வூதியத்தைப் பெறுகிறார்கள். ஆனால், இவ் வங்கியில் கடந்த ஜூலை முதல் இன்று (4 ஆம் பக்கம் பார்க்க)

## தாழ்வுபாட்டில் தரையிறங்கிய ராணுவம்-புலிகள்கடும்மோதல்

(மன்னார்)

சிறிலங்கா கடற்படையினர் மன்னார்த்தீவில் உள்ள தாழ்வுபாடு என்னும் இடத்தில் நேற்றுக்காலை ஆறு மணியளவில் ஐந்து பெரிய பீரங்கிப் படகுகளிலும், ஏழு சிறிய பீரங்கிப் படகுகளிலும் வந்திறங்கினர். அவ்விடத்திற்கு உடன் விரைந்து சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலின் போது இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளனர். இராணுவத்தின் இழப்புகளின் எண்ணிக்கை தெரியவில்லை.

பீரங்கிப் படகுகளில் வந்திறங்கிய சிறிலங்கா படையினருடன் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்திக் (4ஆம் பக்கம் பார்க்க)

## குச்சவெளியில் சினைப்பரால் இரு கடற்படையினர் காயம்

(திருக்கோணமலை)

சிறிலங்கா கடற்படையினர் மீது விடுதலைப்புலிகள் சினைப்பர் தாக்குதலைமேற்கொண்டதில் இரு படையினர் படுகாயமடைந்தனர்.

கடந்த செவ்வாயன்று குச்சவெளி கடற்படை முகாமிற்கு சற்று முன்பாக வந்து நின்ற இரு கடற்படையினர்மீது தமிழீழ விடுதலைப் புலிகளால் சினைப்பர் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. இத்தாக்குதலில் இரு கடற்படையினரும் படுகாயமடைந்தனர். (மு)

## மாவிட்டபுரத்தில் ட்றக் மீது பசீலன் 2000 தாக்குதல்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரத்தில் புலிகளின் ஷெல் தாக்குதலால் இராணுவ ட்றக்வண்டி ஒன்று முற்றாக சேதமடைந்தது ட்றக்கில்வந்தஇராணுவத்தினர் அனைவரும் பலியாயினர்.

நேற்று மாலை 2.30 மணியளவில் மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் ட்றக்வண்டி ஒன்றின்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் பசீலன் 2000 தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலால் ட்றக் முற்றாக எரிந்து நாசமாகியது. ட்றக்கில் வந்த இராணுவத்தினர் அனைவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். (மு)

## வரிவிளம்பரம்

33' நீளம் 15' அகலம் கொண்ட செற் போடுவதற்குரிய பனைமரங்கள், தீராந்திகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கிறசன்ற் ஹொட்டல், பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

(R-790)

## UNIVERSITY OF JAFFNA

Applications will be received by me from suitable candidates for the following posts upto 1990-11-08.

1. Temporary Assistant Lecturer in -
   a) Botany
   b) Chemistry
   c) Mathematics & Statistics
   d) Zoology
   e) Physics
2. Temporary Demostrator in -
   a) Botany
   b) Chemistry
   c) Zoology
   d) Physics
3. Temporary Instructor in Mathematics & Statistics

**Salary Scale:**

1. Temporary Assistant Lecturer: Rs. 3,900/- p. m. (Fixed)
2. Temporary Demonstrator: Rs. 3,250/- p. m. (Fixed)
3. Temporary Instructor: Rs 3. 250/- p. m. (Fixed)

**Qualifications:**

1. **Temporary Assistant Lecturer:**
   i) A First or Second Class (Upper Division) in a Special Degree in a relevant subject; **or**
   ii) A Second Class (Lower Division) in a Special Degree in a relevant subject: or
   iii) Such professional qualifications as may be approved by the University Grants Commission upon the recommendation of the Higher Educational Institution concerned.
2. **Temporary Demonstrator:**
   A Graduate or a person awaiting results of a Final / Degree Examination.
3. **Temporary Instructor:**
   A Graduate or a person awaiting results of a Final / Degree Examination.


Applicants are requested to apply together with their Bio - datas Qualified applicants are also requested to present for the interview scheduled to be held on 1990-11-12 at 10-00 a. m. in the Board Room of this University.

— REGISTRAR

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
30th October, 1990

(B. 1548)

## 60ஆம் நாள் நினைவஞ்சலி



# இளம்புலி நித்தி

(சுப்புமணியம் சிவகுமார்)

முல்லைத்திவு

வீர ஜனனம்: 22 - 06 - 1972
வீர மரணம்; 02 - 09 - 1990

*சிங்களப்படையுடன் நேரடி மோதலில்*
*நித்தி நீ மறைந்து விட்டாயாம்!*
*என்று உன்னை புலிகள் இயக்கத்தில் இணைத்துக் கொண்டாயோ*
*அன்றுதான் எமது கண்களில் இருந்து நீ மறைந்தாய்!*
*நித்தி நீ என்று இந்த மண்ணில் இருந்து மறைந்தாயோ*
*அன்றில் இருந்து எம் கண்களுக்குத் தெரிகிறாய்*
*விடுதலைச் சுடராக...!*

காந்தி கிராமம்,
கோணாவில்,
கிளிநொச்சி.

பெற்றோர்,
சகோதரர்,
உறவினர்கள்.

(B- 1536)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

05 - 08 - 1990 அன்று யாழ்; கோட்டை முகாம் தாக்குதலின்போது வீரமரணம் அடைந்த

**கப்டன் விக்னம் அவர்களுக்கும்**

அவருடன் மரணித்த ஏனைய வீர வேங்கைகளுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஈழ மண்ணில் மலர்ந்தது
07 | 08 | 1968



ஈழ மண்ணுக்காய் மறைந்தது
05 | 08 | 1990

# கப்டன் விக்னம்

(க. தவராசா) உடுத்துறை

*தேனினும் இனிய எங்கள் விக்னமே*
*உனைத் தேடி நாம் வாடுகிறோம் நித்தமுமே*
*பாவி எங்கள் கனவினில் நீ வந்தென்றாலும்*
*பாசமிகு வார்த்தைகளை பகர்வீர் ஐயா*
*கோயிலிலே வைத்துப் புலிவீரர் உமை*
*கும்பிட்டுக் குறை களைவோம் நின்று பாரீர்*
*நாளை மலரும் ஈழமதில் உங்கள் நாமம்*
*நட்ட கல்லும் பேசும் இது நடக்குமண்ணா!*

05 - 08 - 90 அன்று அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் வேறுவழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு 02-11-90 இன்று வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்குகொள்ளுமாறு அனைத்து விடுதலைப் புலிகளையும் பொதுமக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், தகப்பன், சகோதரர்கள்,
மச்சான்மார், மச்சான்மார்,
உறவினர்கள்.

உடுத்துறை:
(R/741)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
18 — 12 — 1971

கோட்டையின்
கொத்தளத்தில்
05 — 08 — 1990

# 2-வது லெப்ரினன்ட் டயஸ்

**செல்வராஜா இராஜேந்திரகுமார் (பாபு)**

*இவருடன் வீரமரணமடைந்த ஏனைய 27 வீர வேங்கைகளுக்கும் எமது வீர அஞ்சலிகள்! உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் பணி தொடரும்.*

(B/1550) குடும்பத்தினர்

## 6ஆம் மாத நினைவஞ்சலி



செல்வன்

# தம்பித்துரை சுசீந்திரன் (சுயன்)

உதயத்தில் 31-3-1968
இதயத்தில் 23-5 1990

*திதி: 2-11-1990*

எங்கள் அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காளி கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

உன்பிரிவால் துயருறும்
—குடும்பத்தினர்
R-786

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்
24 — 10 — 1971



வீரமரணம்
05 — 08 — 1990

5 - 8 - 1990 அன்று யாழ். கோட்டை இராணுவமுகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த

**2ஆவது லெப். வீரவேங்கை நிஸாந்தன்**

# விசுவலிங்கம் செல்வக்குமார்

*உன் கனவுகள் நனவாகி*
*கோட்டையில் புலிக்கொடி பறக்கிறது!*
*உன் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்*
*பூக்களால் அர்ச்சிக்கின்றோம்.*

உன் இன்முகம் காணாது வாடும்
அம்மா, அண்ணா, அக்காமார்
தம்பி, தங்கைமார்.

லூர்துமாதா கோயிலடி,
தும்பளை,
பருத்தித்துறை.

(R/788)

## சிந்தனைக்கு

கொல்லைப்புற வேலிக்கு அப்பாலிருந்து
உன்னைப் பார்த்து புன்சிரிப்பு செய்பவன்,
ஆனால் வேலியைத் தாண்டி ஏறிவராதவனே,
நல்ல அண்டைவீட்டுக்காரன்.

— ஆர்த்தர் பேயர்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 02-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# மலையகத் தோட்டங்களில் சிங்களக் குடியேற்றம்

மலையகத்தில் கைவிடப்பட்ட பெரும் தோட்டக் காணிகளைப் பகிர்ந்தளித்தல் என்னும் போர்வையில் சிங்களக் குடியேற்றத்திற்கு மலையகத்தைத் திறந்துவிடும் நடவடிக்கையில் சிறிலங்கா அரசாங்கம் இறங்கியுள்ளது.

பல தலைமுறைகளாக இத் தோட்டங்களில் வாழ்ந்து இலங்கையின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக விளங்கிய மலையக மக்கள் இந்த காணிப் பங்கீட்டில் புறக்கணிக்கப்படுகின்றார்கள். கொள்கையளவில் அந்தப் பகுதித் தோட்டங்களில் வாழ்ந்த மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள வேளையிலும் நடைமுறையில், மலையகத் தமிழர்கள் ஒதுக்கப்பட்டு வருகின்றார்கள். இதனால் தேயிலைத் தோட்டங்களில் பதற்றமும் நிலவத் தொடங்கியுள்ளது.

'இலங்கை சுதந்திரம்' அடைந்த காலத்தில் இருந்து ஆட்சிக்குவந்த சிங்கள அரசாங்கங்கள் மலையக மக்களின் உரிமைகளைப் புறக்கணித்தே வந்துள்ளன. அவர்கள் அரசியலில் பங்கெடுப்பதையும், ஒரு சக்தியாக வளர்வதையும் திட்டமிட்டு ஒடுக்கிவந்தனர்.

அதேவேளை மலையகத் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கியவர்களும் தமது நலனை அடிப்படையாகக்கொண்டு இயங்கினரே ஒழிய மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு இயங்கவில்லை. உரிமைக்காகப் போராட வேண்டியவர்கள் சலுகையுடன் திருப்தியடைந்தார்கள்.

காலத்திற்குக் காலம் ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்கள் வடக்கு, கிழக்கில் எவ்வாறு இனவிகிதாசாரப் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த குடியேற்றத் திட்ட நடவடிக்கைகளை மேற் கொண்டனரோ அதே போன்று மலையகத்திலும் தமிழர் இனவிகிதாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நிர்வாக எல்லைகளை மாற்றியமைப்பதிலும் சிங்களவரை மலையகத்தில் குடியேற்றுவதிலும், அதேவேளை மலையகத்தில் இருந்து தமிழரை விரட்டுவதிலும் அக்கறை கொண்டிருந்தார்கள்.

1972ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்தச் சட்டத்துடன் மலையகத்தைச் சிங்கள மயமாக்கும் திட்டத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொண்டது. மலையகத் தோட்டப் பகுதியில் சிங்களவர் தொழில் ரீதியாகப் புகுத்தப் பட்டனர். அதேபோன்று காணிப்பங்கீட்டின் மூலமும் சிங்களவருக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது.

1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த யூ. என். பி. அரசாங்கமும் புதிய வீடமைப்புத் திட்டங்கள் என்ற போர்வையில் சிங்களவரை தோட்டங்களின் மத்தியில் குடியமர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

அவற்றோடு தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள கைவிடப்பட்ட தோட்டங்களைப் பகிர்ந்தளித்தல் நடைமுறையிலும் இந்த நிலைமையே தொடர்கின்றது. ஆரம்பத்தில் இந்தக் காணி பகிர்ந்தளித்தலில் சர்ச்சை எழும்பியபோது தோட்டங்களில் வாழ்ந்தவர்களுக்கு 80 வீதமும், வெளியோருக்கு 20 வீதமும் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் நிலைமை தலைகீழாகவே இருக்கிறது.

அத்தோடு இந்தப் பகுதிகளில் சட்ட விரோதமாக காணித் துப்பரவு செய்வோருக்கும் அரசாங்கம் காணி உறுதிகளை வழங்குகின்றது. இந்த இரு விடயங்களும் அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலாகும். எடுத்துக்காட்டாக அனுமதியில்லாமல் காணியைத் துப்பரவு செய்வோருக்கு காணி உறுதிகளை அரசாங்கம் வழங்குவதைக் கூறலாம்.

பிரஜாவுரிமைச் சட்டம் மலையகத் தமிழருக்கு சட்ட ரீதியாகப் பிரஜாவுரிமையை வழங்கியபோதும், நடைமுறையில் அமுலாக்கல் பின்னடைவது போன்றே காணி பகிர்ந்தளிப்பு விடயத்திலும் அமுலாக்கல் சட்டத்திற்கு விரோதமாகவுள்ளது. அதாவது மலையகத் தமிழர் போராட முற்படும்போது உரிமைகளை வழங்குவதாக அறிவித்து சட்டங்களை ஆக்கும் சிறிலங்கா அரசாங்கம், அதன் அமுலாக்கத்தைத் திட்டமிட்டே பின்னடையச் செய்கின்றது.

இந்தநிலை தொடர்ந்து வருவதால் மலையகத் தமிழ் மக்கள் இலங்கையில் தமக்குள்ள உரிமைகளை நிலை நாட்டிக் கொள்ள உடனடியாக அரசிற்கெதிராகப் போராட முன்வரவேண்டும். இல்லாவிடில் சிங்களக் குடியேற்றங்களினால் இன்று கிழக்கில் தமிழர்கள் அனுபவிக்கும் தொல்லைகளைவிட பெரும் தொல்லைகளை அனுபவிக்க வேண்டிவரும், ஏனெனில் சிங்கள பேரினவாத சக்திகளினால் மலையகம் சூழப்பட்டுள்ளது.

# “உதிக்கும்திசைநோக்கி உன்னத பயணம்”

1

திரு. மாத்தயாவின் தலைமையில் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து திருமலை மாவட்டத்திற்குள் அடியெடுத்து வைக்கிறோம். ஏற்கனவே அங்கே குறிப்பிட்ட இடத்திற்கு வந்திருந்த திருமலை மாவட்டக் குழுவினருடன் இணைந்து கொள்கின்றோம். கால்நடையாகப் பயணத்தைத் தொடர்கிறோம். எறும்புக்கூட்டம்மாதிரி நீண்ட வரிசையாய்ப்பயணம் தொடர்கிறது. ஒரு காலத்தில் பச்சைப்பசேல் என்றிருந்த வயற்காணிகள் கட்டாந்தரையாகக் காட்சியளிக்கின்றன. செல்லும் பாதையெங்கும் மனித நடமாட்டமே இல்லை. பற்றைகள், முட்கள், சேறு எல்லாவற்றையும் தாண்டி வெகு வேகமாக ஆனால் விழிப்புடன் திருமலை மாவட்டக் குழுவினர் முன்னே செல்கிறார்கள். நாம் போய்ச் சேர வேண்டிய இடம் விரைவில் வந்துசேர்ந்துவிடக்கூடாதா? என்ற எதிர்பார்ப்புடன் சென்று கொண்டிருக்கிறேன். வழியில் நாங்கள் கண்ட ஒரேயொரு உயிரினம் மாடுகள் தான். கேட்பார் மேய்ப்பார் யாருமின்றி கூட்டம்கூட்டமாகத் திரிகின்றன. தமிழர்களுக்கில்லாத சுதந்திரம் இந்த மாடுகளுக்கு!

தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் அனைவருமே இப்பகுதிகளைவிட்டு வெளியேறி விட்டனர். எங்கோ ஒரிரு ஆண்கள் மட்டும் தங்கள் மண்ணைப் பிரியமனமில்லாமல் குடும்பத்தினரை அனுப்பி விட்டு தாங்கள் மட்டும் அங்கேயே வசித்து வருகின்றனர் எனக் கேள்விப்படுகிறோம். இராணுவ முகாம்களின் வெளிச்சம் மட்டும் மிகப் பிரகாசமாக உள்ளது. அதிகாலை 5. 30 மணியளவில் தற்காலிகமாகப் பயணம் நிறுத்தப்படுகின்றது. அந்த இடத்தில் நாங்கள் தங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பயணம் தொடங்கும்போது எனக்காகத் தரப்பட்ட இரவு உணவைச் சாப்பிடக் கூடிய நிலையில் நான் இல்லை. உடனே தேவைப்படுவது தூக்கம் சுமார் மூன்று மணித்தியாலங்கள் அயர்ந்த தூக்கம்.


காலை 8. 30 மணியளவில் எழுந்து வெளியே வருகிறேன். நாங்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து அயலைப் பார்க்கின்றேன். கிராமமே வெறிச்சோடிக் கிடக்கின்றது. அங்கொருவர், இங்கொருவராக இருந்தவர்கள் போராளிகளுக்கான உணவைத் தயாரிப்பதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த பயணத்தைத்தொடர்வதற்குரிய ஆயத்தநிலையில் திருமலை மாவட்டக் குழுவினர் இருக்கின்றனர். இந்த இடைப்பட்ட நேரத்தில் இவர்கள் யாரும் தூங்கிய மாதிரி இல்லை. எனக்கோ ஆச்சரியம். ஏனெனில் நாங்கள் கடந்து வந்த தூரத்தின் இருமடங்கு தூரத்தை இவர்கள் அந்த இரவில் நடந்துள்ளார்கள். எம்மை அழைத்துச் செல்வதற்காக இப்பகுதியில் நடந்து வந்து திரும்ப எங்களுடன் இங்கே நடந்து வந்துள்ளார்கள். அத்துடன் இந்த இடைப்பட்ட நேரத்தில் தூங்கவுமில்லை. அடுத்த காணிக்குள் சில நாய்கள் உலாவுகின்றன. நாயின் சொந்தக்காரர்கள் அகதிகளாகச் சென்றுவிட இந்த மண்ணின் பாதிப்பு நாய்களிலும் தெரிகிறது. சாப்பாடு இல்லாத இந்த நாய்கள் பாவம் என நினைத்துக் கொள்கின்றேன். இரவுச் சாப்பாட்டுக்கென எனக்காகத் தரப்பட்ட பார்சல் நினைவுக்கு வரவே அதை நாய்களுக்குப் போடுவோம் என்றெண்ணி அந்த வீட்டின் உள்ளே வருகின்றேன்.

திருமலை மாவட்டப் பொறுப்பாளர் பதுமன் வருகிறார். வழக்கமான உரையாடல். ''இரவு நாங்கள் நடந்த தூரம் எவ்வளவு?'' எனது கேள்வி. ஐந்து அடுத்து மூன்று அப்படியே... என்று கணக்குப்போட்டு மொத்தம் 20 மைல்கள் என்கிறார். வியப்பில் ஆழ்கின்றேன்: நான் இருபது மைல் நடந்து விட்டேன் என்றல்ல. திருமலை மாவட்டப் போராளிகள் 40 மைல்கள் நடந்திருக்கிறார்களே என்பதும், அத்துடன் இந்த இடைநேரத்திலும் தூங்காமல் அடுத்த பயணத்துக்குரிய தயார் நிலையில் இருக்கின்றார்களே என்பதும்தான் எனது வியப்புக்குக் காரணம்.

பதுமனை விட்டு விலகிச் செல்கிறேன். தன்னைச் சூழ இருந்தவர்களிடம் மெதுவான குரலில் பதுமன் கேட்கிறார். ''எல்லோரும் சாப்பிட்டாச்சா?'' வழக்கமான இந்தக் கேள்வியைத் தொடர்ந்து மௌனம் நிலவுகிறது. மீண்டும் பதுமனே தொடர்கிறார். ''எல்லோரும் சாப்பிடாதீங்க சோறு இல்லை – வழமைக்கு மாறான வேண்டுகோள். சூழ இருந்தவர்கள் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை. நான் வியக்கிறேன். ஏனெனில் இதுவரை நானும் ஒரு சராசரிக் குடும்பஸ்தனாக இருந்தவன் நான். மூன்று நேரச் சாப்பாட்டில் எந்த நேரமும் பிந்தக் கூடாது எனக்கு. கொஞ்சம் பிந்தினாலும் மிகவும் சிரமப்படுவேன். அந்தக் காட்சிகள் நினைவுக்கு வந்தன; அத்துடன் இந்த மாதிரியான ஒரு இடத்தில் இரவுச் சாப்பாட்டைக் காலைச் சாப்பாடாக ஏற்றுக் கொள்ளும் மனநிலை இல்லாமல் நாய்களுக்குப் போட நினைத்த என்னை எண்ணி நான் குறுகிக்கொண்டேன். சாப்பாடு ஓரளவு குறைந்தால் பங்கிட்டுச் சாப்பிடச் சொல்லியிருப்பார் பதுமன். ஆட்களின் தொகையையும் சாப்பாட்டின் அளவையும் நினைத்துத்தான் இவ்வாறான வேண்டுகோளை தனது போராளிகளுக்கு விடுத்துள்ளார் என்பதை நினைக்கும் போது திருமலை மாவட்டத்தின்யதார்த்தநிலையின்கோரத்தைப் புரிந்து கொண்டேன்.

வெளியே திருமலை மாவட்டப் போராளிகள் மாமரத்தின்கீழ் அணி வகுத்து நிற்கிறார்கள். அவர்களுக்கான உத்தரவுகள் வழங்கப்படுகின்றன. குழுத் தலைவர்களின் அறிவுறுத்தல்களின் பின் அவர்கள் கலைகிறார்கள். ஒருவரோடொருவர் சிரித்துப்பேசியபடி மாங்காய்களைத் தடியால் எறிந்து விழுத்துகிறார்கள். ஏதோ சொட்டைத் தீனுக்காகத்தான் இதை வீழ்த்துகிறோம் என்ற பாவனையில் மாங்காய்களைப் பொறுக்கி கடிக்கின்றார்கள். இந்தப் பிரயாண முடிவில் அவர்கள் சென்றடையும் முகாமில் தான் இனி வயிறாரச் சாப்பிட வேண்டும்.

பதுமன் வருகிறார். திருமலை மாவட்ட போராளிகளின் உணவு நிலைமை பற்றி அளவளாவுகிறேன். ''இப்ப ஒருமாதிரி பிரச்சினையில்லை; I. P. K. F. காலத்தில் தான் ஆகக்கஷ்டப்பட்டிட்டம். இவனெல்லாம் ஒரு தொடர்புமில்லாமல் காட்டுக்குள் பாலைப்பழத்தையும், விளாங்காயையும் சாப்பிட்டுக் கொண்டே சில காலம் இருந்திருக்கிறான். இவனோடை இருந்தவங்களெல்லாம் கடலில் வண்டி கவிழ்ந்து போன இல செத்துப் போனாங்கள்'' என்று சொல்லி ஒரு பையனை அறிமுகப்படுத்துகிறார்.



திருமலைத்தளபதிபதுமன்

மனித நடமாட்டமில்லாத பகுதியில் மீண்டும் பிரயாணம் தொடங்குகிறது. கையில் துப்பாக்கியை ஏந்தியபடி தமது சொந்தமண்ணில் காலடிபதிக்கிறார்கள். 90க்கு மேற்பட்ட படை முகாம்கள் உள்ள இந்த மாவட்டத்தில் உள்ள தமிழனாகப் பிறந்த எவனதும் ஆயுட்காலத்தைஅதிகரிப்பது, உயிர்வாழ்வுக்கு உத்தரவாதம் கொடுப்பது இந்த ஆயுதங்களே. இலட்சியத்தில் நம்பிக்கை கொண்ட இவர்களின் பின்னால் கூனிக்குறுகியபடி நானும்... (தொடரும்)

# ஈராக் மீதான பொருளாதாரத்தடை குறைந்தளவு பலனே தந்துள்ளது

- ஜோர்ஜ்புஷ்

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை இதுவரை குறைவான பலனையே தந்திருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வாஷிங்டனில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஜோர்ஜ்புஷ் ஐ. நா: சபையினால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத்தடையானது இதுவரை குறைந்தளவு பலனையே தந்திருப்பதாக ஒப்புக் கொண்டுள்ளார்.

ஆனாலும் குவைத்தில் இருந்து வெளியேறும்படி ஈராக்கிய ஜனாதிபதி சதாம் உசைனுக்கு தாம் மேலும் ராஜீய ரீதியிலான நெருக்கடிகளை மேற்கொள்ளப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

குவைத்தில் இருக்கும் அமெரிக்கர்கள் ஈராக்கினால் நடத்தப்படும் முறை தங்கள் பொறுமையை மேலும் சோதிப்பதாகவும் அவர் தெரிவித்தார்;

இதேவேளை வளைகுடாவில் கடமையாற்றும் பிரித்தானிய தளபதி ஒருவர் கருத்து வெளியிடுகையில் குவைத்தில் இருந்து ஈராக் நிபந்தனையின்றி வெளியேறாது என்று தெரிவித்தார்.

# மாவீரர் தினம் பற்றி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாள் பற்றி உதவி அரச அதிபர்கள், கிராமசேவையாளர்கள், தபால் உபதபாலகப் பொறுப்பாளர்கள், உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், காணிப்பதிவாளர் திணைக்கள அதிகாரிகள், மின்சார சபை அதிகாரி, கமத்தொழில் திணைக்கள அதிகாரி, கால்நடை வைத்திய நிலைய அதிகாரி, கடற்றொழில் கூட்டுத்தாபன அதிகாரி ஆகியோருக்கான கலந்துரையாடல்கள் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் நாளை சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், தென்மராட்சிப் பகுதியில் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை மூன்று மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும், வலிகாமம் பகுதியில் எதிர்வரும் புதன் கிழமை மாலை மூன்று மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும், தீவுப்பகுதியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமைகாலை பத்து மணிக்கு வேலணை மகாவித்தியாலயத்திலும், காரைநகர்ப் பகுதியில் எதிர்வரும் பத்தாம் திகதி சனிக்கிழமை காலை பத்துமணிக்கு யாழ்ரன் கல்லூரியிலும் மாவீரர் நாள்பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

மேற்குறிப்பிட்டுள்ள சகல அதிகாரிகளும் தத்தம் பகுதிகளில் நடைபெறும் கலந்துரையாடல்களில் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவீரர் செயலகப் பொறுப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (மு)

# உரங்கள் மீதான தடையால் விவசாயம் பெருமளவில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப்பிரதேசங்களுக்குசில இரசாயன உரவகைகளின்விநியோகத்தை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சுதடுத்துள்ளது. இதனால் இங்கு பெரும்போக நெற்செய்கை உட்பட பெரும்பாலான பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட பெரும்போக நெற்செய்கைக்கு வி. கலவை 2000 மெற்றிக்தொன், அமோனியம் சல்பேற் 2500 மெற்றிக்தொன், யூரியா 2750 மெற்றிக்தொன் ஆகிய அளவுஉரம்தேவைப்படுகிறது. இதில் யூரியா விநியோகத்தை பாதுகாப்பு அமைச்சு தடுத்து உள்ளது.

ஏனைய உரவகைகளும் போதியளவு இங்கு இல்லை. இந்த நிலையை நீக்குவதற்கு கொழும்பு சென்றுள்ள யாழ். அரசாங்க அதிபர்நடவடிக்கை எடுப்பாரென எதிர்பார்க்கப் படுகிறது.

தற்போது நெற்செய்கைக்கு யூரியாவுக்குப் பதிலாக அமோனியம் சல்பேற்று பாவிக்கலாம் என்றும், ஆனால் யூரியா பாவிக்கும் அளவைவிட இருமடங்கு அமோனியம் சல்பேற்று பாவித்தாலே எதிர்பார்க்கும் பயன்பெற முடியும் என்று யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க)

## பாதயாத்திரை

(சாவகச்சேரி)

தென்மராட்சி விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பிரிவினரால் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றை எடுத்துக் கூறும் பாதயாத்திரை தற்போது தென்மராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய இசை,நாடக நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் என்பன இப் பாதயாத்திரையில் இடம்பெற்றுவருகின்றன.

அண்மையில் கைதடிப்பகுதியில் நடாத்தப்பட்ட இப் பாதயாத்திரையில் பங்குகொண்ட முப்பதுக்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (மு)

## ஓய்வூதியம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரை ஓய்வூதியம் எதுவும் வழங்கப்படவில்லை.

கிராமிய வங்கிகளுக்கு நிதி மூலமாயிருந்து, அவை செயலாற்ற உதவுவது மக்கள் வங்கியாகும். மக்கள் வங்கியும் கோப்பாய் கிராமிய வங்கிக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை என்று ஓய்வூதியக்காரர் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகிறது.

# மாவீரர்தினத்தைமுன்னிட்டு எழுச்சி யாத்திரை

(சாவகச்சேரி)

மாவீரர் நினைவாக விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் தென்மராட்சிப் பிரிவு மேற்கொண்டுள்ள எழுச்சி யாத்திரை இன்று காலை 9 மணிக்கு கொடிகாமம், கச்சாய் வீதியிலுள்ள மாவீரர் மண்டபக் கட்டடத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த எழுச்சி யாத்திரை இம்மாதம் இருபதாம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும். ஆரம்ப வைபவத்தில் தென்மராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் அமுதினி, தென்மராட்சி மக்கள்முன்னணிஅரசியற் பொறுப்பாளர் பாப்பாஉட்பட பல பிரமுகர்களும் மாவீரர்களின் பெற்றோர்களும் கலந்துகொள்ளவுள்ளார்கள். இந்த எழுச்சி யாத்திரையில் தமிழீழ மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (மு)

## பாடசாலைக்கு சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் கல்லூரியில் கல்விபயிலும் உயர்தர வகுப்பு மாணவிகள் இதுவரை பாடசாலைக்கு சமுகம் தராதவர்கள் 5.11.90 இல் இருந்து சமுகம் தரும்படி மேற்படி பாடசாலையின் அதிபர் செல்வி ஆர். ராஜரட்ணம் கேட்டுக்கொள்கிறார்.

## இவர்களுக்குத் தொடர்பில்லை

(கோண்டாவில்)

கோண்டாவில் குமரகோட்டம் என்றபகுதியில் மின்மாற்றியில் இருந்து களவாடப்பட்ட ஒயில் மின்சாரசபையில் வேலைசெய்யும் இருவரால் தான் களவாடப்பட்டது எனத் தெரிவின்ற வேளையிலும், மின்சாரசபை ஊழியர்களான செ. செல்வரத்தினம் அ. தவராசா ஆகியோருக்கும் இந்த களவிற்கும் தொடர்பில்லை என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

## பாதயாத்திரை

(நல்லூர்)

நல்லூர்க்கந்தன் ஆலயத்தில் இருந்து இன்று காலை 7-00 மணிக்கு பாதயாத்திரை ஒன்று ஆரம்பமாகிறது. இந்தப் பாதயாத்திரை பருத்தித்துறை வீதி, செம்மணி வீதி, கண்டி வீதி வழியாக சென்று கைதடி, நுணாவில் சிறிஇவ பூதவராயர்ஆலயத்தை அடையும். அடியார்கள் அனைவரும் பங்குபற்றும் வண்ணம் கேட்கப்படுகின்றனர்.

# பெரும்போக பயிர்ச்செய்கை மழையால் அழியும் அபாயம்

யாழ். குடாநாட்டில் கடந்த இரு நாட்களாக கடும் மழை பொழிந்ததினால் பெரும்பாலான பகுதிகளில் பெரும்போக நெற் செய்கை அழிவடையும் நிலையில் உள்ளது.

இங்குள்ள அனைத்து சிறிய குளங்களிலும் நீர் மட்டம் உயர்ந்து வெளியே வழிந்து கொண்டிருக்கிறது. வயல்களிலும் நெற் பயிரை மூடி நீர் உள்ளது. மழை தொடர்ந்தும் இருக்குமானால் பள்ள நில நெற் பயிர்கள் முற்றாக அழிந்துவிடும் என விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். (க)

## மூன்று புலிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வங்களுக்கெதிராகப் பல தாக்குதல்களைத் தலைமையேற்று நடாத்திய மேஜர் சங்கர் இராணுவத்தினரிடமிருந்து பெறுமதியான ஆயுதங்கள்பலவற்றைக் கைப்பற்றியதுடன், பல இராணுவத்தினரையும் மரணமடையச் செய்தவர்.

தம்பலகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மேஜர் சங்கர், 1984 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து தனது கடும் உழைப்பினாலும் போர் திறமையாலும் மூதூர்ப் பிரதேசப்பொறுப்பாளராக உயர்ந்தவர்.

ஈச்சிலம்பத்தை என்னுமிடத்தில் இந்திய இராணுவத்தினரின் இரு வட்டப் பாரிய சுற்றிவளைப்புக்குள் தனது குழுவினருடன் அகப்பட்ட நிலையிலும் இந்திய இராணுவத்துடன் தீரமுடன் போராடி வயிற்றில் காயம்பட்ட நிலையிலும் முற்றுகையை உடைத்துத் தனது குழுவினருடன் வெளியேறிச்சாதனை படைத்தவர் மேஜர் சங்கர்.

மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான பல தாக்குதல்களைத் தலைமையேற்று நடாத்திய சங்கர் நேற்றைய தினம் மணலாறு மினிமுகாம் தாக்குதலில் பத்து இராணுவத்தினரைப் பலியாக்கியதுடன், பெருந்தொகையான ஆயுதங்களையும் கைப்பற்றிய நிலையில் வீர மரணமடைந்துள்ளார். (மு)

# இரட்டைச் சூட்டடுப்பின் விலை குறைக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

மக்களின் நன்மை கருதி தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிமுகம் செய்துள்ள இரட்டைச் சூட்டடுப்பின் விலை தற்போது குறைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய மாரிகால சூழ்நிலையில் விறகுத்தட்டுப்பாடு நிலவுவதோடு, கிடைக்கக் கூடிய விறகின் விலை கூட மிகவும் அதிகமாகவுள்ளது.

இவ்வாறான நிலையைக் கருத்திற்கொண்டு வீட்டுப் பாவனையாளர்களின் எரிபொருட்பிரச்சினையைத்தீர்க்கும் முகமாக தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்ட இரட்டைச் சூட்டடுப்பின் விலை குறைக்கப்பட்டுள்ளது. இவ்வடுப்புகளைப் பெறவிரும்புவோர் தங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு விலை குறைக்கப்பட்ட இரட்டைச் சூட்டடுப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தமிழீழ ஆய்வு நிறுவனம்அறிவித்துள்ளது(மு)

## வர்த்தகர்கள் சமுகம் தரவும்

மானிப்பாய் கோவில் பற்றுக்குள் வரும் ஆனைக்கோட்டை, மானிப்பாய், சுதுமலை, நவாலி, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டிசிற்றூரவைகளுக்குள் அடங்கிய சகலவர்த்தகர்களையும் தவறாது மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு நாளை சனிக்கிழமைமாலை 2மணிக்கு வரும்படி மானிப்பாய் வர்த்தகர் சங்கம் கேட்டுள்ளது.

## காணிப் பங்கீட்டில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டத்தில் 63 காணித் துண்டுகளை பகிர்ந்தளிப்பதற்கென ஒரு சில மாதங்களுக்கு முன்னர் காணிகேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப்பரீட்சையும் நடத்தப்பட்டது.

ஆனால் இதுவரை மேற்படி காணிகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. காணிகேட்டு இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த சுமார் 20 மலையக மக்கள் விண்ணப்பித்திருந்தனர்.

## கைப்பற்றப்பட்ட

(1(ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ ஆர். பி. ஜி.செல் 4
★ புறப்புளர் 2
★ ஆர். பி. ஜி. கோல்சர் 1
★ 60 எம். எம். மோட்டர் 1
★ 60 எம். எம். மோட்டர் ஷெல் 1
★ ரி-81 1
★ மகசீன் 8
★ ரி-56 3
★ மகசீன் 15
★ ரி 56-1 1
★ ஐ எம். ரவை 2196
★ திப்பிட்டர் 1
★ சொட்கன் 3
★ 303 துப்பாக்கி 5
★ 303 மகசீன் 4
★ 303 ரவை 61
★ தொலைத் தொடர்பு சாதனம் 1
★ ஜே. ஆர். கைக்குண்டு 3
★ ஹெல்மட் 4
★ கிற்பாக் 1
★ சப்பாத்து 9 சோடி

(மு(

## இந்தியாவில் 20 பேர் பலி

(டில்லி)

இந்தியாவில் பல பாகங்களிலும் நேற்று நடந்த வன்முறையில் 20 பேர் துப்பாக்கிச் சூட்டிற்கும், கத்திக் குத்துக்கும் இலக்காகிப் பலியானதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராமஜென்மபூமி, பாபர் மசூதிப் பிரச்சினைகளால் தொடர்ந்தும் இந்தியாவின் வட மாநிலங்கள் பலவற்றில் பதற்ற நிலை நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இடம்பெயர்ந்தோர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த ஊழியர்களுக்கான கூட்டம் எதிர்வரும்4ஆம்திகதி காலை 10 மணிக்கு யாழ். சாதனா பாடசாலையில் நடைபெறும்:

## தாழ்வுபாட்டில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த வேளையில் அரச படையினருக்கு உதவிராக ஐந்து ஹெலிகளும், இக்ண்டு பொம்மர்களும், ஒரு அவ்ரோ விமானமும் புலிகளுக்கெதிராக விமானத் தாக்குதலை மேற்கொண்டன.

இதேநேரம் தாழ்வுபாட்டில் இருந்து நான்கு மைல்கள் தூரத்தில் உள்ள தன்னாடி இராணுவ முகாமில் இருந்தும் சம்பவம் நடந்த இடத்திற்கு பவல் கவசவாகனம் சகிதம் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது கறிச்சட்டிபாளையத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை. (மு)

## மீண்டும் இடமாற்றம்

யுத்தநிலை காரணமாக காங்கேசன்துறையில் இருந்து தெல்லிப்பளைக்கு மாற்றப்பட்டிருந்த மக்கள் வங்கிக்கிளை தற்போது அங்கும் ஏற்பட்டுள்ள பதட்டநிலை காரணமாக யாழ் / கண்ணாதிட்டி மக்கள் வங்கிக் கிளைக் கட்டடத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இயங்கவுள்ளது.

திங்கள் முதல் வங்கிக் காசோலைகள், வெளிநாட்டுக் காசோலைகள் வைப்பிலிடுவதற்காக ஏற்றுக்கொள்ளப்படுமெனவும், பண நிலைமைக்கேற்ப மட்டுப்படுத்தப் பட்ட அளவு பணக்கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் வங்கியின் பிரதேச முகாமையாளர் தெரிவித்தார். (மு)


### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ் · மாவட்டம்

### விசேட பொதுக்கூட்டம்

காலம்: 02 - 11 - 90 (வெள்ளிக்கிழமை)
நேரம்: முற்பகல் 10 மணி
இடம்: யா / மங்கையர்க்கரசி வித்தியாசாலை
(நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அருகாமை)
உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

(B/1544) செயலாளர்.



### தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### ஊழியர்கள் கூட்டம்

மேற்படி எமது சங்கப் பணியாளர் கூட்டம் 03-11-90 திகதி சனிக்கிழமை (நாளை) காலை 8.30 மணிக்கு தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத் தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெறும். மாவீரர் தினம் பற்றி ஆலோசிக்கப்படும். ஊழியர்கள் அனைவரும் தவறாது சமுகம்தரவும்.

தலைவர்
01-11-90 தெல்லிப்பளை
(B/1552) ப.நோ.கூ.ச.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.